செ.வெ.எண்: நாள்:30.07.2021

**நாமக்கல் மாவட்டம்**

**ஆடி 18 அன்று (ஆகஸ்ட் 3 –ந்தேதி) ஆடிப்பெருக்கை முன்னிட்டு, கொல்லிமலையில் வல்வில் ஓரி அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தல் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

-----

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஆடிப்பெருக்கை முன்னிட்டு, கொல்லிமலையில் வல்வில் ஓரி அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தல் குறித்த ஆலோசனைக் கூட்டம், காவல் கண்காணிப்பாளர் திரு.சரோஜ் குமார் டாகுர்.இ.கா.ப., அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் இன்று (30.07.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது,

கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக தற்போது பொதுமுடக்கம் மற்றும் 144 தடை உத்தரவு நடைமுறையில் உள்ளதால், ஆடி 18 அன்று (ஆகஸ்ட் 3 – ந்தேதி) வல்வில் ஓரி அவர்களின் சிலைக்கு மாலை அணிவிக்க 15 அமைப்பினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கொல்லிமலையில் வல்வில் ஓரி அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தல் தவிர, விழாக்கள், ஊர்வலம் உள்ளிட்ட வேறு நிகழ்ச்சிகளுக்கு அனுமதி இல்லை. கொல்லிமலையில் எந்த ஒரு அமைப்பும் பதாகைகள், கொடிகள், சுவரொட்டிகள் வைக்கவும் மற்றும் சுவர் விளம்பரம் செய்யவும் அனுமதி இல்லை.

கொரோனா நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்காக அரசு அறிவித்துள்ள நடமுறைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும். சிலைக்கு மாலை அணிவிக்க அனுமதி வழங்கப்படும் ஒவ்வொரு அமைப்பிலும் 5 நபர்கள் மட்டும் சென்று சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டும். வாகனங்களில் ஒலிபெருக்கி உபயோகிக்கக் கூடாது. திறந்த நிலை வாகனங்களில் வர அனுமதி இல்லை. வாகனங்களின் இருக்கைகளில் அமர்ந்து மட்டுமே வர வேண்டும்.

சிலைக்கு மாலை அணிவிக்க வரும் போது கொடி, பதாகைகள் மற்றும் உருவப்படங்கள் ஆகியவற்றை கைகளில் பிடித்துவர அனுமதி இல்லை. முழக்கங்கள் எதுவும் எழுப்பக் கூடாது. அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் தங்கள் நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு கொல்லிமலையிலிருந்து சென்றுவிட வேண்டும்.

காரவள்ளி மற்றும் முள்ளுக்குறிச்சி சாலை வழியாக மட்டுமே வாகனங்கள் செல்ல வேண்டும். வாகனங்களில் வரும்பொழுது பதாகைகள், தட்டி முதலிய

எந்தவிதமான விளம்பர பலகைகளையும் வாகனத்தில் கட்டி வர அனுமதிக்கப்பட மாட்டாது.

மாலை அணிவிக்க வரும் அனைத்து பிரதிநிதிகளும், கொரோனா நோய் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளை (முக கவசம் அணிதல், சமூக இடைவெளி கடைபிடித்தல் மற்றும் கிருமிநாசினி பயன்படுத்துதல்) உள்ளிட்ட அரசு விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.

அரசு விதித்துள்ள நிபந்தனைகளை நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ள அனைவரும் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். அவ்வாறு கடைபிடிக்கவில்லையென்றால் அவர்கள் மீது பேரிடர் மேலாண்மைச் சட்டப்பிரிவு மற்றும் பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பதாக கருதி இ.த.ச. பிரிவு 145-ன்கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.கோட்டைக்குமார் உட்பட மாலை அணிவிக்கும் பல்வேறு அமைப்பினர், அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.